**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 132/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **ஆஸ்லி லைனல்** |
| Father's / Husband Name | : | ஆல்பர்ட் ஜெரால்டு |
| Address | : | **சென்னை** |
| Age | : | 34/2025 |

**தேதி : 01.07.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.**இரண்டாவது எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் சென்னையில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் தாம்பரத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய நண்பர் கலைச்செல்வன் பள்ளிக்கரணையில் தங்கியிருந்தார். என்னுடைய நண்பரின் சொந்த ஊர் சிறுநிலா. எனக்கு சொந்தமான ஹோண்டா ஜாஸ் பதிவு எண். TN 11 P 6913 என்ற காரில் நானும், எனது நண்பர் கலைச்செல்வனும் அவருடைய குடும்பத்தாரும் சொத்து பிரிப்பது சம்மந்தமாக 07.03.2021 அன்று இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு 08.03.2021 அன்று அவருடைய ஊருக்கு வந்தோம். அன்று மதியம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நானும், எனது நண்பரும் சென்றோம். சார்பதிவாளர் அலுவலகத்தில் பிரச்சனை ஏற்பட்டு என்னுடைய நண்பரின் தந்தைக்கு தலையில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. அவரை என்னுடைய காரில் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துவந்தோம். அதன்பிறகு அவருக்கு சிகிச்சை அளித்துக்கொண்டிருந்தார்கள்.

நான் வெளியே சென்றுவிட்டு வரலாம் என்று ஆவின் கேட் வழியாக வந்தபோது ஆஜர் எதிரியும் அவருடன் இருந்தவர்களும் மொத்தம் 4 பேர் என்னை அசிங்கமாக திட்டி அடித்தார்கள். முகத்தில் கையால் அடித்ததில் நான் அணிந்திருந்த கண்ணாடி உடைந்துவிட்டது. என்னுடைய மூக்கில் அடிப்பட்டு இரத்தம் வந்தது. எனது நண்பர் வந்து மறித்துவிட்டார். நான் மருத்துவமனையில் சேர்ந்து முதலுதவி சிகிச்சை பெற்றேன். அதன்பிறகு நான் எனது ஊருக்கு சென்றுவிட்டேன். ஒரு வாரம் கழித்து வந்து நான் புகார் கொடுத்தேன். என்னிடம்காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.